பதிவு எண். M. 6311 ☆ தொலைபேசி: 51331 ☆ நிறுவிய ஆண்டு: 1953 ☆ விலை 7 காசு ☆ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 20 சென்னை: ஐப்பசி 4 (20—10—72) வெள்ளி வெளியூர்: ஐப்பசி 5 (21—10—72) சனி இதழ்: 105

தமிழ்நாட்டுக்கு 100 டன் பருப்பு வகைகள்

தஞ்சை, அக். 20—

"வட நாடுகளிலிருந்து தமிழ் நாட்டுக்கு 100 டன் பருப்பு வகைகள் வருகின்றன; இது மாநிலத்தின் தேவையில் 60 சதவிகிதத்தை நிறைவு செய்யும்" என்று உணவு அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்துள்ள விலை கிடைக்க நேரடியாக நெல் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகள் குறித்து கலெக்டர்-மற்றும் அதிகாரிகளுடன் அமைச்சர் விவாதித்தார்.

இன்று இல்லையே!

★

"பழிமொழிக்கும்—இழிமொழிக்கும் பதில் சொன்ன நெஞ்சகம் இன்று இல்லை—எனவே வஞ்சகம் விளையாடுகிறது.

— கழகத் தலைவர் கலைஞர்

அறிஞர் அண்ணா எழுகிறார்—பேசுகிறார்

'யார் என்ன சொன்னாலும் கழகம் அழியாது'

'பலவீனமான அடிப்படையில் அது கட்டப்பட்டதல்ல'

'காங்கிரசில் பிளவு என்றால் கவலைப்படுவார் எவருமிலர்—நமக்குள் பிளவு என்றால்தான் நாட்டு மக்கள் கவலைப்படுகின்றனர்'

சென்னை, அக். 20—

'யார் என்ன சொன்னாலும்—எதை எழுதினாலும், நமது கழகம் அழியாது; காரணம்—திராவிட முன்னேற்றக் கழகம் பலவீனமான அடிப்படையில் கட்டப்பட்ட ஒன்றல்ல என்பதால்தான்!

"ஊர்வலம் சென்று கொண்டிருக்கும்போது இடையே நாலுபேர் இருமுவர்—இரண்டு பேர் கனைப்பர்—இருவர் தும்முவர்—அவர்களைப் பொருட்படுத்தி, அதற்காக ஊர்வலம் நின்றுவிடுவதில்லை!

"மாட்டு வண்டி ஓடும்போது, 'கட கட'வென்ற சப்தம் எவ்வளவு பெரிதாக எழுந்தாலும் யாரும் கவனிப்பதில்லை; ஆனால், மோட்டார் வண்டி ஓடும்போது ஒரு சிறு சப்தம் கிளம்பினாலும், உடனே, 'அது என்ன' என்று கவனிக்கிறார்கள்; காரணம் என்ன? மாட்டு வண்டி விலை குறைந்தது—மோட்டார் வண்டி விலை உயர்ந்தது!

'அதுபோல, காங்கிரசில் பிளவு என்றால் கவலைப்படுவார் எவருமிலர்; நமக்குள் பிளவு என்றால்தான் நாட்டு மக்கள் கலங்குகிறார்கள்; கடந்த பத்து நாட்களுக்கு முன்பு நான்கூடத்தான் கலங்கிப் போனேன்; ஆனால், 'இதனால் கழகம் எள்ளளவும் பாதிக்கப்படாது' என்பதால் தெளிவு பெற்றேன்"

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், 1961-ஆம் ஆண்டில் ஏற்பட்டதோர் நிலையைச் சுட்டிக்காட்டித் தஞ்சையில் தந்த அறிவுரையை—அவர் இறந்து காட்டிய நெஞ்சுரத்தை மேற்கோள் காட்டிக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், 'அன்பகம்—அறிவகம்' என்ற தலைப்பில் கழகத் தோழர்களுக்கு எழுதியுள்ள மடலில் குறிப்பிட்டிருக்கிறார்; அவரது மடல் வருமாறு:—

உடன்பிறப்பே!

"கண்களைக் குளமாக்கிக் கொண்டு இந்தக் கடிதத்தைப் படித்திடுவாய் என்று எனக்குத் தெரியும்; உன் உள்ளத்து உணர்ச்சிகள் உதடுகளின் படபடப்பாக—விழிகளில் நீர்த் துளிகளாக வெளிப்படுவதை உணர முடியாதவனா நான்?

எத்தனையோ முறை—என் உயிரினும் இனியவனே—உன் மீசைகள் துடித்ததைப் பார்த்திருக்கிறேன்! தோள்களைத் தட்டியவாறு நீ நிமிர்ந்து நின்றதைக் கண்டிருக்கிறேன்!

மார்பைப் புடைத்துக்கொண்டு, மானமறவன் நான்' என்பதைத் தோற்றத்தால்—பேச்சால்—வீரச் செயல்களால் அறிவித்ததோடெல்லாம் அகம் குளிர்ந்தவன் நான் என்பதை நீ அறியாதவனல்லவே—உன் உருவத்தை நான் கண்டபோது!

எதிரிகள் உன்னை—உன் தலைவர்களை—உன் கழகத்தைத் தாக்கியிருப்பார்கள்; தரக்குறைவாக விமர்சித்திருப்பார்கள்; அதனால் நீ வேங்கை வரிப்புலியென வடிவெடுத்து உறுமினாய்!

இன்றோ—உன் நெஞ்சக் கொதிப்பு நீராக வழிகிறது கண்களில்; ஆம்—சுடு நீராக; காரணம்—கண்டுபிடித்தா சொல்லவேண்டும்? உன் கண்களைப் புண்களாக்கிய நிகழ்ச்சிக்குக் காரணம் கண்டுபிடித்தா சொல்ல வேண்டும்?

இதயத்தில் எழும் கனல் உன் நீள்விழிகளில் புனலாகத் தோற்றமளிக்கிறது! இதுபோல் ஒரு புயல், உன்னையும் என்னையும் ஆட்டிப் படைத்தது 1961-ம் ஆண்டில்; அதனை நீ மறந்திருக்கமாட்டாய்; பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நமக்கு வரும் சோதனை போலும் இது!

என் அருமை நண்பர் சம்பத்—இன்றைக்கும் அருமை நண்பர்தான்—என் அன்பு நண்பர் கவிஞர் கண்ணதாசன்—இருவரின் தலைமையில் எழுந்தது அமளி!

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்களை எதிர்த்து மூண்டது அந்தப் பூசல்; அந்த அரசியல் சதுரங்கத்தில் கவிஞர் கண்ணதாசன் பகடைக்காயாகப் பயன்படுத்தப்பட்டார்!

நண்பர் சம்பத், கழகத்தின் வரவு-செலவுக் கணக்கில் சந்தேகத்தை எழுப்பினார்; அண்ணாவை, 'சர்வாதிகாரி' என்று வர்ணித்தார்; 'சனநாயகத்தைத் தூக்கி எறிந்துவிட்ட தலைவர்' என்று குற்றஞ் சாட்டினார்; அந்தக் குற்றச்சாட்டுகளின் தொடர்பாக வேலூரில் செயற்குழு நடைபெற்றது; தலைமைக் கழகத்தின் வரவு-செலவுக் கணக்குகள் செயற்குழுவில் வைக்கப்பட்டன; செயற்குழு கணக்கு விவரங்களை ஏற்றுக்கொண்டது; அத்துடன் விவகாரத்தை நிறுத்தவில்லை நண்பர் சம்பத்;

அண்ணாவை, 'சர்வாதிகாரி' என்று வர்ணித்து அவர் வெளியிட்ட கருத்து பற்றிய சர்ச்சை எழுந்தது; தகராறு பெரிதாயிற்று—பேச்சளவில்தான்; சம்பத், செயற்குழுவை விட்டு வெளியேறினார்; செயற்குழுவில் அவர் தாக்கப்பட்டதாகவே பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டன.

உடன்பிறப்பே—உனக்கு ஒன்று புரிகிறதா? கணக்கு கேட்பது—சர்வாதிகாரி என்று கூறுவது இந்த இரண்டு குற்றச்சாட்டு கழகத்திற்கும் புதிதல்ல—1972-ஆம் ஆண்டில் முளைத்ததல்ல—அறிஞர் அண்ணா காலத்திலேயே அவர் மீதும், கழகத்தின்மீதும் சுமத்தப்பட்ட பழைய பழியின் தொடர்ச்சிதான் என்பது இப்போது உனக்குப் புரிகிறதா?

அந்த நேரத்தில், தஞ்சையில் ஒரு சிறப்புக் கூட்டம்—தேர்தல் நிதி திரட்டுவதற்காக நடத்தப்படுகிறது; 1961 பிப்ரவரி 13-ஆம் நாள்; நான் கழகத்தின் பொருளாளர்; அந்த நிகழ்ச்சியில் அண்ணா சிறப்புரையாற்றுகிறார்.

சிறப்புக் கூட்டத்தின் தலைவர் தோழர் தங்கமுத்து; முன்னுரையில் அவர் உருக்கமாகக் குறிப்பிடுகிறார்—

"அண்ணா அவர்களே—கழகப் பொருளாளர் கருணாநிதியை நாங்கள், 'கண்' என மதிக்கிறோம்; 'கழகக் கணக்கை சரியாக

(4-ம் பக்கம் பார்க்க)

துரோகத்தின் எதிரொலி

பொறுப்பிலிருந்து விலகுகின்றனர்

சென்னை, அக். 20—

ஆலந்தூர் நகர எம். ஜி. ஆர். மன்றப் பொருளாளர் பதவியிலிருந்து தாம் விலகிவிட்டதாக இரா. சேகரரங்கம் (ஆலந்தூர் நகராட்சித் தலைவர்) அறிவித்திருக்கிறார்.

திருவனந்தபுரம், அக். 20—

திருவனந்தபுரம் கரமனை எம். ஜி. ஆர். ரசிகர் மன்றப் பொருளாளரும்—செய்தித் தொடர்பாளரும்—திருவனந்தபுரம் எம். ஜி. ஆர். தலைமை மன்றம் வெளியிடவிருக்கும் 'உலகம் சுற்றும் வாலிபன்' மலர் தொகுப்பாளருமான காரை ஜின்னா, தாம் வகித்துவந்த எல்லாப் பொறுப்புகளிலுமிருந்தும் சாதாரண உறுப்பினரில் இருந்தும் விலகிவிட்டதாக அறிவித்திருக்கிறார்.

'துரோகச் சக்தி'களின் முகத்திரை கிழிகிறது

எம். ஜி. ஆர்.—இந்திரா காந்தி செயலாளர் சந்திப்பின் மர்மம் என்ன?

சென்னை, அக். 20—

"தமிழ்நாட்டில் தி. மு. க. விவகாரம், ஐந்தாறு தினங்களாகத் தேசியப் பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் அடிபட்டு வந்துள்ளது; எனினும், பல பத்திரிகைகளில் ஒரு முக்கியமான செய்தி இதுவரை வெளிவரவில்லை.

டில்லி அரசியல் வட்டாரங்களில் பூடகமாகத் தெரிந்த இந்த விஷயம், 'பிரதமர் இ[illegible]ரா காந்தி ஒப்பிளவில் எவ்வளவு தூரம் [illegible]த்தை செலுத்தியிருக்கிறார்' என்பதுதான்!

எம். ஜி. ஆருக்கும்—இந்திராவின் [illegible]கள்' என்று கூறப்படும் சில புள்ளி[illegible]க்கு மிடையே சென்ற சில மாதங்களாகப் பேச்சு வார்த்தைகள் நடந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு 'இதய வீணை' படப் பிடிப்புக்குக் காஷ்மீருக்குச் சென்றுவிட்டுச் சென்னைக்குத் திரும்பும்போது, இந்திரா காந்தியை எம். ஜி. ஆர். சந்தித்ததாகச் செய்திகள் கூறுகின்றன.

ஆகஸ்டு மாதத்தில் இந்திராவின் அரசியல் காரியதரிசியான யஷ்பால் கபூர் புதுச்சேரிக்குச் சென்றிருந்தபோது, அங்கே எம். ஜி. ஆர். அவரைச் சந்தித்ததாகவும் சொல்லப்படுகிறது.

எனவே, எம். ஜி. ஆர். கட்சி வெளியேற்றம் யாருக்கும் பரபரப்பூட்டும் செய்தியாக இருந்தாலும், காங்கிரசுக் கட்சித் தலைமைக்கு எதிர்பார்த்த விளைவாகவே வந்திருக்கிறது எனலாம்."

[பிரதமரின் செயலாளரான திரு. கபூர் சென்று திரும்பிய மாநிலங்களிலெல்லாம் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டது நினைவிருக்கலாம். உ.பி., பிகார், ஒரிசா போன்ற மாநிலங்களில் அவர் தங்கியிருந்து பணம் செலவழித்த பிறகுதான் பலர் கட்சி மாறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது நினைவிருக்கலாம்.]

—'சுதேசமித்திரன்' பத்திரிகையின் டில்லி அரசியல் நிருபர் கஸ்தூரி ரங்கன் அந்த ஏட்டில் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து.

கழகச் செயல் வீரர்களுக்குப் பொதுச்செயலாளர் நாவலர் தெளிவுரை

‘தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்’

[✶]

‘தீமையிலும் நன்மைகள் பல உண்டு’

[★]

‘வேதனையான நிலை ஏற்பட்டாலும் சோர்வுற வேண்டியதில்லை’

[✶]

‘கண்ணி... -- கட்டுப்பாட்டுடன் கடமையாற்றி வெற்றி பெறுவோம்’

சென்னை, அக். 20—

“ தீமையிலு... என்பார்கள்; கழகத்திற்கு இப்போது வேதனையான நிலை ஏற்பட்டிருந்தாலும்கூட அதிலும் ஒரு நன்மை ...து; கழகத்திலே சிறிது சேர்ந்தவர்கள் எல்லாம் இன்று விறுவிறுப்போடு -- முனைப்போடு கழகத்தினைக் கட்டிக்காக்கும் எண்ணம் கொண்டிருக்கின்றனர்.

“ அக். 22-ஆம் நாளன்று தமிழகமெங்கும் பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன; ஒரு சில இடங்களில் கூட்டங்கள் நடைபெற்றாலும் போதும்; ஆனால் அவை சிறப்பான முறையில் நடைபெறும் அளவில் பார்த்துக்கொள்ள வேண்டும்.

“ புரட்சி நடிகர் அவர்கள் தி.மு.க. கிளைக் கழகங்களை மாற்றும்படிச் சொல்லியிருக்கிறார்; கழகத்தின் மேல் மட்டத்தில் -- செயற்குழு மட்டத்தில் இருப்பவர்கள்தான் ஆதரவு தரவில்லையென்றும், கிளைக் கழகத்தில் இருப்பவர்களுடைய ஆதரவு தன பக்கம்தான் இருக்கிறது -- என்ற கருத்துப்படவும் சொல்லியிருக்கிறார்; இதில் சிறிதுகூட உண்மையில்லை என்பதைச் செயல்கள்மூலம் நாம் விளக்கிக் காட்டவேண்டும்.

“ நாம், பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் நின்று தூய்மையான உள்ளத்தோடு -- நாணயமான பண்போடு -- நேர்மையான போக்கோடு பணியாற்றி வருகின்றோம்.

அறிஞர் அண்ணா அவர்கள் தமது தம்பிமார்களைப் பற்றியெல்லாம் குறிப்பிடும்போது, ‘கையிலே காசற்றவர்கள்; -- ஆனால் மனதிலே மாசற்றவர்கள்’ என்றுதான் குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள்.

‘ இதுவரையில் மாற்றுக் கட்சியினர் எடுத்துவைத்த குற்றச்சாட்டுக்களை உண்மையின் துணைகொண்டு கருத்து வலிவோடு -- வாதத் திறமையால் வென்று வந்திருக்கிறோம்; புரட்சி நடிகர் எம்.ஜி. ஆர். அவர்கள் எப்போதும் நமக்கு எதிரியாகத் தம்மை ஆக்கிக்கொண்டு குற்றச்சாட்டுகளைக் கூறத் தொடங்கியிருக்கிறாரோ இனி அதுபற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை; அந்தக் குற்றச்சாட்டுக்களை முறியடித்துத் தூள் தூளாக்க முடியும்; அப்படிப்பட்ட தன்னம்பிக்கையோடு நாமனைவரும் செயலாற்ற வேண்டும்.

‘ கடமையை நாம் தொடர்ந்து ஆற்றுவோம் -- கண்ணியத்தோடு ஆற்றுவோம் -- கட்டுப்பாடோடு ஆற்றுவோம் -- என்றும் வெல்லுவோம் ”

என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பொதுக்குழு உறுப்பினர்களிடையே உரையாற்றுகையில் தெளிவுறச் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்; அவரது உரை வருமாறு:—

“ இந்தப் பொதுக்குழுக் கூட்டத்தின் இன்றியமையாமையை நாம் எடுத்த முடிவுகளிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்; இந்தப் பொதுக்குழுவின் மூலம், ‘கழகம் உறுதிப்பாடுடையதாக இருக்கிறது’ என்பதையும், ‘கழகக் கட்டுப்பாட்டில் அனைவரும் எந்த அளவிற்கு பிடிப்புடன் இருக்கிறார்கள்’ என்பதையும் அறிந்துகொண்டோம்.

புரட்சி நடிகரைப் பற்றி செயற்குழு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள், ‘பல ஆயிரக்கணக்கான -- இலட்சக்கணக்கான கழகத் தோழர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில், தெரிவிக்கப்பட்ட கருத்துக்களாகும்; அதையொட்டிப் பல்வேறு நிலைமைகளை ஆராய்ந்து -- கழகத்தினைச் சேர்ந்த முக்கியமான தலைவர்கள்— அமைச்சர் பெருமக்கள் தலைமைக் கழகத்தினைச் சேர்ந்தவர்கள் -- மாவட்டச் செயலாளர்கள் ஆகியவர்களுடன் ஆராய்ந்து, ‘எப்படிப்பட்ட நடவடிக்கையை மேற்கொண்டால் கழகத்தின் எதிர்காலத்திற்கு மாசு ஏற்படாத அளவிற்குக் கழகத்தின் பணியைச் செம்மையாகக் கொண்டு செல்ல இயலும்’ என்பதையெல்லாம் யோசித்து -- அதன் பிறகு கழகத் தலைவர் கலைஞரும் -- நானும் ஒரு முடிவிற்கு வந்து ஒழுங்கு நடவடிக்கை எடுத்தோம்.

இப்படிப்பட்ட முடிவை எடுக்கும்போது, கலைஞரும் சரி -- நானும் சரி -- மற்ற நண்பர்களும் சரி -- எந்த அளவிற்கு வேதனையோடு செய்திருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

எதிரிகள் எப்படிக் குற்றஞ்சாட்டுகிறார்களோ அதே முறையில் -- அவர்களுக்கு உடந்தையாக -- கழகத்தின் முக்கியமான பொறுப்பைத் தாங்கிக்கொண்டிருக்கின்ற ஒருவரே அப்படிச் செயல்படும் போது, உலகம் என்ன கருதும் - நாடு என்ன கருதும் -- மக்கள் என்ன கருதுவார்கள் -- என்ற நிலையில்தான் இப்படிப்பட்ட முடிவிற்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது; வேறு வழியில்லாததால்தான், இந்த முடிவிற்கு வந்தோமே தவிர, வேறு ஒன்றுமில்லை!

‘செயற்குழுவில் -- பொதுக்குழுவில் கொண்டுவரலாமே -- முன்கூட்டியே ஏன் நடவடிக்கை எடுக்கவேண்டும்’ என்று கேட்கக்கூடும்; அறிஞர் அண்ணா அவர்கள் இருந்திருந்தால், எப்படியெல்லாம் தம்பிமார்களின் யோசனைகளைக் கேட்டுச் செய்திருப்பாரோ -- அதே முறையில்தான் இப்போதும் யோசனை செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அக் 8-ந்தேதியன்று எம். ஜி. ஆர். சென்னைக் கூட்டத்தில் பேசினார்; நான் அன்று வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிறேன் -- கலைஞர் மதுரையில் இருக்கிறார்; அவருக்கு இரவு 12-மணிக்கு செய்தி தெரிந்தது; 1-மணிக்கு நான் கூட்டங்களை முடித்துக்கொண்டு ஒன்றரை மணியளவில் வேலூருக்குத் திரும்பியபோது தொலைபேசி மூலம் எனக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது; கலைஞருடன் நான் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டேன்; ‘சென்னையில் அனைவற்றையும் பேசிக்கொள்ளலாம்’ என்று அவர் கூறி உடனே அவர் புறப்பட்டுவிட்டார்; அதற்குப் பிறகுதான், ‘என்ன நடவடிக்கை எடுக்கலாம்’-- என்ன முடிவு எடுக்கலாம்’ என்று ஆராய்ந்து, மற்றும் தொடர்புள்ள அனைவரையும் கலந்தாலோசித்து எடுத்த முடிவுதான் இது!

‘செயற்குழுவில் வந்து இந்த முடிவினை எடுத்தால் அது கழகத்திற்கு நலன் பயக்குமா -- முன்கூட்டியே சட்டதிட்டத்தின்படி எடுத்தால் நல்லதா’ என்று ஆராய்ந்தோம்; கடைசியில், ‘இந்த முடிவுதான் சிறந்தது’ என்று தீர்மானித்தோம்; அப்படி இல்லாவிட்டால், எப்படிப்பட்ட முடிவுகள் செயற்குழுவில் ஏற்பட்டிருக்கும்? உங்களுடைய உணர்ச்சிகள் மூலம் ஒவ்வொரு செயலுக்கும் விளக்கம் கேட்டுப் பதில் சொல்லக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கும்; மேலும் நமக்கு முன்கூட்டியே எடுத்துக்காட்டாக ஒரு சம்பவம் அனுபவமாக இருந்ததால்தான் இப்படி முடிவு எடுத்தோம்.

அண்ணா அவர்களின் காலத்தில் தோழர் சம்பத் பிரச்சினையைக் கொண்டுவந்தபோது, அண்ணாவே வேலூர் பொதுக்குழுக் கூட்டத்திற்கு முன்பு பொழுது விடியும் வரையில் கலந்தாலோசித்து ‘செயற்குழு -- பொதுக்குழு ஆகியவற்றில் பேசிக்கொள்ளலாம்’ என்ற முடிவிற்கு வந்தார்; செயற்குழு நிகழ்ச்சிகளைத் திரித்துக் கூறி ‘என்னை அடித்துவிட்டார்கள் -- (சட்டையைக் கிழிக்காத நிலையிலேயே ஒரு கிழிந்த சட்டையை எடுத்துக்கொண்டு) -சட்டையைக் கிழித்துவிட்டார்கள்’ என்று ஊர் ஊராகக் காட்டி, தோழர் சம்பத் குற்றஞ்சாட்டினார்; அதற்கு நாம் ஆறு மாத காலத்திற்கு விளக்கம் தருகின்ற அளவிற்கு நிலைமை ஏற்பட்டது.

அப்படிப்பட்ட சிறு சம்ப... ...னால் -- வார்த்தைகள் கொஞ்சம் தடிப்பாக வ... ...ருக்கொருவர், ‘நீ யார் -- உன் யோக்கியதை என்ன-- ...பில்லையா’ என்று வார்த்தைகளைப் பரிமாறிக்கொள்ளத் ... ...னால், அது பெரிய செய்தியாக -- விவகாரமாக ஆகிவிடக்... ...வாறு முன்கூட்டி நடவடிக்கை எடுத்ததால், வருகின்ற தாக்... ...கள், கலைஞரையும் -என்னையும்தான் தாக்கும்; ஆனால், செயற்குழுவிலோ -- பொதுக்குழுவிலோ இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்பட்டால், அது கழகத்தையே தாக்கும் - எதிர்காலத்தையே பாதிக்கும்; ஆறு மாத காலத்திற்கு விளக்கம் சொல்ல நேரிடும்.

வேலூர் கூட்டத்திற்குப் பிறகு, ஆறு மாத காலத்திற்கு, ‘அண்ணா இங்கே உட்கார்ந்திருந்தார் -- அவர் இங்கே இருந்தார் -- இவர் அங்கே நின்றுகொண்டிருந்தார் -- கலைஞர் இந்த இடத்தில்தான் இருந்தார்’ என்று ஒவ்வொன்றுக்குமாக விளக்கம் சொல்ல வேண்டிய நிலை இருந்தது; அந்தக் கூட்டத்திற்கு வராதவர்களெல்லாம் வந்து தாக்கியதாகக் கூறப்பட்டது; இதையெல்லாம் சிந்தித்துத்தான், முன்கூட்டியே நடவடிக்கை எடுத்தோம்.

அதற்கு உங்களுடைய ஒருமித்த ஆதரவைத் தந்து -- நாங்கள் எடுத்த முடிவு சரியானது என்பதை நிரூபித்துக் காட்ட உறுதுணையாக இருந்த உங்கள் அனைவருக்கும் மறுபடியும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்தப் பத்திரிகையிலும் இதைப் பற்றிக் குறைகூறாமல் -- யாரைப் பற்றியும் குற்றச்சாட்டை எடுத்து வைக்காமல் தவிர்க்கப்பட வேண்டிய சூழ்நிலைக்காகத்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

‘இப்போதே கழகத்தை விட்டு நிரந்தரமாக ஏன் நீக்கக்கூடாது’ என்று பலரும் கேட்கிறீர்கள்; சட்டதிட்டத்தின்படி, விளக்கம் கேட்டு 15 நாட்கள் தரப்பட்டிருக்கிறது; ‘சமாதான விளக்கம் தாருங்கள்’ என்ற அடிப்படையில்தான் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; அதற்குத் தலைமைச் செயற்குழுவும் -- பொதுக்குழுவும் ஒப்புதல் அளித்திருக்கின்றன; எடுத்த முடிவின்படி செயல்பட அனுமதி அளித்திருக்கிறீர்கள்; விளக்கம் கேட்டு -- அந்தத் தன்மையின்படி முடிவெடுக்க முழு உரிமை தந்திருக்கிறீர்கள்; அதற்காக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதனால் ஏற்படுகின்ற விளைவு என்னவென்றால், சாதாரணமானவர்கள் தவறு செய்தால் கண்டிக்கலாம் -- வருத்தம் தெரிவிக்க வைக்கலாம்; ஆனால், தலைமைக் கழகத்தில் இருக்கின்ற -- முக்கியப் பொறுப்பில் இருக்கின்ற ஒருவரே கட்டுப்பாட்டை மீறுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபோது, அதைத் தடுத்து நிறுத்தும் சூழ்நிலையினை ஏற்படுத்தாவிட்டால், கழகத்தின் கட்டுப்பாடே குலையும் என்பதால்தான் சட்ட திட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க நேர்ந்தது.

இப்போதுகூடப் பத்திரிகைகளில், திசைதிருப்பிவிடுகின்ற பாணியில் ‘எம். ஜி. ஆர். கணக்குக் கேட்டார் -- வெளியேற்றப்பட்டார்’ என்ற பொருள்பட எழுதி வருகிறார்கள்; அதற்கான விளக்கங்களை நாம் காரண காரியங்களுடன் மக்களுக்கு எடுத்துச் சொல்லும்போது, உண்மை நிலையை மக்கள் புரிந்துகொள்வார்கள்; அதற்கான பணிகளை நீங்கள் செய்யவேண்டும்.

எந்த ஒரு நிலைமை ஏற்பட்டாலும், கட்டுக்கோப்பாக -- திட்டவட்டமாக இருந்து செயல்படவேண்டும்.

கழகத்தின் கட்டுப்பாட்டைக் காப்பாற்ற வேண்டியதுதான் முக்கியமான குறிக்கோள்; ‘தனிப்பட்ட எம்.ஜி. ஆரைப் பொறுத்து அல்ல தி. மு. கழகம்’ என்பதை நிலைநாட்டவேண்டும்’ எந்தக் காரணம் கொண்டும் நம்மீது குற்றம் சுமத்தாத அளவிற்கு -- நாம் எவ்வளவு தூய்மையானவர்கள் என்பதைக் காட்டுகின்ற வகையில் நடந்துகொள்ளவேண்டும்’ நம் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகளுக்கு தகுந்த முறையில பதில் சொல்லவேண்டும்.

அவர்கள் நூற்றுக்கணக்கான அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள்; அதில் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு இழிவான முறையில் எழுதியிருக்கிறார்கள்; பதிலுக்குப் பதில் அதே பாணியில் ஏசுகின்ற நிலைமைக்கு நாம் வரக்கூடாது.

இனிமேலும், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு எப்போதும் காட்டி வந்த மரியாதையைக் காட்டிவிட்டுத்தான் அவரது குற்றச்சாட்டுகளுக்கும் பதில் தரவேண்டுமே தவிர, ‘அவன்’ -- ‘இவன்’ என்ற முறையில் யாரும் பேசக்கூடாது.

சம்பத் தனிக் கட்சி தொடங்கியபோது, அண்ணா அவர்கள், “ சம்பத் ‘அறிஞர் அண்ணா’ என்று இப்போதெல்லாம என்னைச் சொல்லியிருந்திருப்பாரானால், ஆறு மாத காலத்திற்குப் பதில் சொல்ல வேண்டி இருந்திருக்கும்; அவர் எப்போது ‘திருவாளர் அண்ணாதுரை’ என்று அழைக்க ஆரம்பித்தாரோ -- அன்றே நான் வெற்றி பெற்றுவிட்டேன ” என்று சொன்னார்.

“ ‘அறிஞர் அண்ணா இந்தத் தவறுகளைச் செய்தார்’ என்று சம்பத் சொல்லிக்கொண்டிருந்திருப்பாரானால், மக்கள் மன்றத்திற்குச் சமாதானம் சொல்ல வேண்டியிருந்திருக்கும்; இப்போது அது தேவையில்லை ” என்று அண்ணா சொன்னார்.

ஆகவே, கழகத் தோழர்கள் அவரைச் சிறிதளவும் தரம் தாழ்த்தாத அளவிற்கு அவருடைய நடிப்பைப் பற்றியோ, திரைப்பட உலக உறவுகளைப் பற்றியோ, ‘அப்படிப்பட்டவர் -- இப்படிப்பட்டவர்’ என்றோ, ‘இவரைவிட அவர்தான் நடிப்பில் சிறந்தவர்’ என்ற முறையிலோ பேசக்கூடாது; நீங்கள் அப்படிப் பேசுவீர்களானால், பொதுமக்கள் நம்மை மதிக்கமாட்டார்கள்; நம்முடைய சொற்களுக்கு மதிப்பு ஏற்படாமல் போய்விடும்; நம்மைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத நிலைமை ஏற்படும்.

கழகப் பொருளாளராக இருந்த புரட்சி நடிகர், 1971 தேர்தலுக்காக -- அவர் முயற்சியால் வசூலித்த தேர்தல் நிதி எவ்வளவு என்பதை நாடறியும் -- நாமும் அறிவோம்.

கடைசி வரையில்கூடக் கலைஞர் அவர்களும் -- செயற்குழு உறுப்பினர்களும், ‘சமாதானம் -- சமாதானம்’ என்று சொல்லி, ‘அப்படியாவது கழகத்திற்கு நல்லது ஏற்படட்டும்’ என்று முயன்று பார்த்தும் பயனில்லாமற் போய்விட்டது; ஆகவே, பொதுமக்களுடைய சம்மதத்தைப் பெற நம்மிடம் நியாயம் இருக்கிறது.

‘யார் குற்றம் செய்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கத் தயார்’ என்று கலைஞர் சொல்லியிருக்கிறார்; ‘தவறு இருந்தால் சுட்டிக்காட்டுங்கள் -- இன்னார் இன்ன தவறு செய்தார்கள் என்று சொல்லுங்கள் -- உடனே நடவடிக்கை எடுக்கப்படும்’ என்று எத்தனையோ முறை அறிவித்திருக்கிறார்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். வெளியேற்றப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதனால், கழகத்திற்கும் -- கலையுலகத்திற்குமான தொடர்பை எந்தக் காரணம் கொண்டும் நாம் இழக்கக்கூடாது; ‘புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். வெளியே போகிறாரே’ என்பதால், கலைக்கும் -- கழகத்திற்கும் உள்ள தொடர்பை விட்டுக் கொடுக்காத அளவிற்கு அதை நாம் நிறைவு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்.

கழகத்தில் பலர் கலை உலகத்தில் தொடர்பு கொண்டவர்கள் இருக்கிறார்கள் -- அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; நாடகங்கள் மூலம் -- திரைப்படங்கள்மூலம் -- கவிதைகள் மூலம் -- இசை மூலம் கருத்துக்களை மக்களிடம் சொல்லவேண்டும்.

அண்ணா அவர்கள் சொன்னதுபோல், மற்றவர்கள் கருத்துக்களை எடுத்துவைக்கும் முறைக்கும் -- நாம் எடுத்து வைக்கும் முறைக்கும் உள்ள வேறுபாடு, கலை உணர்வோடு கொள்கைகளை நாம் எடுத்துச் சொல்வதுதான்.

கம்யூனிஸ்டுகள் ஏராளமான புத்தகங்களை வைத்திருக்கிறார்கள்; ஆனால் அதை யாரும் புரட்டிப் பார்த்ததில்லை; வாங்கிப் படிப்பவர்களும் படிக்க முடியாது; படித்தாலும் புரியாது!

ஆனால் அண்ணா அவர்கள், கலை உணர்வோடு கழகக் கருத்துக்களை எடுத்துவைத்த காரணத்தால்தான், மற்றவர்கள் போட்டி போட முடியாத அளவிற்கு வெற்றி கண்டு வந்திருக்கிறோம்.

மற்ற கட்சிக்காரர்கள் ஆறு கூட்டங்கள் போட்டால், அதே நேரத்தில் நாம் 600 கூட்டங்கள் போட்டு நம் கருத்துக்களைப் பரப்புகிறோம்; நாம் எடுத்துவைக்கின்ற கருத்துக்கள், ஒவ்வொருவருடைய இதயங்களையும் தடவுகின்றன; அதற்குக் காரணமே கலை உணர்வுதான். ஆகவே, அதனை நாம் தொடர்ந்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; இதையெல்லாம் ஏன் கூறுகிறேனென்றால், இந்தச் சந்தர்ப்பத்திற்காக அதை நாம் அறவே விகவிட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான்.

இப்போதெல்லாம் நாம், மாணவர்களோடு தொடர்பு கொள்ளாமல் இருந்துவருகிறோம்; 1965—1966—1967-ல் மாணவர்களுடைய முழு ஆதரவும் -- ஒத்துழைப்பும் நமக்கு இருந்தன; இந்த நான்காண்டுக் -- காலத்தில் அந்த நிலை மாறி வந்திருக்கிறது; அதற்குப் பல காரணங்கள் உண்டு.

மாணவர்களுடைய உள்ளம் எப்போதும் போராடுகின்றவர்களுடைய பக்கம்தான் செல்லும்; பிரச்சினைகளைப் போராட்டங்களாக ஆக்கி -- அரசினை எதிர்க்கும் அளவில் அமைச்சர்களைச் சந்தித்துக் கோரிக்கைகளை விடுக்க மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்களால்தான் முன்னிற்க முடியும்.

நாம் ஆளும் கட்சியினராக இருப்பதால், நம்மை எதிர்த்தே நம்முடைய மாணவர்கள் போராட முடியாத நிலை; அதையும், ‘நேரில் சென்று பேசித் தீர்த்துக்கொள்ளலாம்’ என்ற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

உதாரணமாக, ஒரு கல்லூரியில் நம் மாணவர்கள் 20 சதவிகிதம் என்றால், காங்கிரசைச் சேர்ந்தவர்கள் 10 சதவிகிதம் தான் இருக்கிறார்கள்; எந்தப் பற்றும் இல்லாதவர்கள் 70 சதவிகிதம் இருக்கிறார்கள்; அந்தப் பத்து சதவிகிதத்தினர் போராடுகின்ற காரணத்தினத்தாலேயே நடுவில் உள்ள இந்த 70 சதவிகிதத்தில் 60 சதவிகிதத்தினர் அவர்கள் பக்கம் செல்கிறார்கள்; அதனால்தான் கழகத்தினைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருந்தாலும் -- அந்த மாணவர்களைவிட நமக்கு பேச்சுத் திறமை அதிகமாக இருந்தாலும் -- செயலாற்றுகிறபோது வெற்றி பெற முடியவில்லை; ஓரளவுக்கு அதனை நாம் மாற்றவேண்டும்.

மாணவர்களோடு நெருங்கிய தொடர்புகொண்டு பணியாற்ற அமைச்சர்களாக விளங்கும் எங்களுக்குப் போதுமான அளவுக்கு நேரமில்லை; கழகக் காப்பாளர்களும், பொறுப்பாளர்களுந்தான் அந்தப் பொறுப்பினை மேற்கொள்ளவேண்டும்.

கழகத் தலைவர்கள் எல்லா ஊர்களுக்கும் செல்கின்றபோது, பொது நிகழ்ச்சிகளிலும் -- அரசு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்கின்ற நேரம் போக ஒரு மணி நேரம், திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும்.

மாணவர்களால் ஏற்பாடு செய்யும் கூட்டங்களுக்குக் கழகத் தோழர்களும் -- கிளைகளும் ஆதரவாக இருந்து கூட்டங்களை நடத்துவது நல்லது; அதற்கான முயற்சிகளைப் பரவலாக செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.”

‘பொதுச் சொத்தைப் பாதுகாப்பதில் மக்கள் ஒத்துழைப்பு அவசியம்’

அரசு பஸ்களுக்கு ஏற்பட்ட சேதம் பற்றி அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்

சென்னை, அக். 20—

‘ தமிழ்நாட்டில் கடந்த ஒரு வார காலத்தில் 35 அரசாங்கப் பஸ்கள் சேதப்படுத்தப்பட்டன; இப்படிப்பட்ட சொத்துச் சேத நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட வேண்டும்; பஸ்கள் எல்லாம் அரசாங்கத்திற்குச் சொந்தமானவையே தவிர தனிப்பட்ட நபருக்கோ -- ஓர் அரசியல் கட்சிக்கோ சொந்தமானது அல்ல என்பதை மாணவர்கள் உணர வேண்டும்.

“ ஆகவே பொதுச் சொத்தைப் பாதுகாப்பதில் பொதுமக்களும் -- மாணவர்களும் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன் ’

என்று போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் சுட்டிக்காட்டிக் கூறினார்; இத் தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

“ நேற்று காலையில் கலைக் கல்லூரிக்கு அருகில் ‘28-சி’ பஸ் கொளுத்தப்பட்டது.

அமைந்தகரையில் ‘27-பி’ பஸ்சுக்குத் தீ வைக்க முயற்சித்தனர்; முன் கண்ணாடி நொறுக்கப்பட்டது; அங்கேயே 27-ம் நெம்பர் பஸ் பின்புறக் கண்ணாடி உடைக்கப்பட்டது.

திருவல்லிக்கேணியில் ‘25 பி’ பஸ்சின் பின் சீட்டுகள் இரண்டு கொளுத்தப்பட்டன.

இன்று மட்டும் அரசு பஸ்சுக்கு மொத்தச் சேதம் ரூ. 1 இலட்சமாகும்.”

கல்வீச்சினால் 10 பஸ்கள் சேதமடைந்தன; தீ வைத்ததால் ஒரு பஸ் சேதமடைந்தது; மற்றொரு பஸ் இலேசான சேதமடைந்தது.”

வன்முறையினர் அட்டூழியம்

சென்னையில் நேற்று எம்.ஜி ஆர். ரசிகர்களும் -- அவரை ஆதரிக்கும் மாணவர்களும் வன்முறையில் ஈடுபட்டனர்; இதில் 2 பஸ்களுக்குத் தீ வைக்கப்பட்டது; 10 பஸ்கள், கல்வீச்சினால் சேதமடைந்தன.

இதுகுறித்து சென்னை நகரப் போலீசுக் கமிஷனர் ஷெனாய், அறிக்கையொன்றில் கூறியிருப்பதாவது:—

“ காலை 10-05 மணிக்கு மாநிலக் கல்லூரி மாணவர்கள் சுமார் 200 பேர் கல்லூரியை விட்டு வெளியேறினார்கள்; அதில் சிலர் தெற்குக் கடற்கரைச் சாலையில் சென்ற பஸ்கள் மீதும் -- மற்ற வாகனங்கள் மீதும் கல் வீசினர்.

11-00 மணிக்கு குருநானக் கல்லூரியைச் சேர்ந்த 100 மாணவர்கள், கல்லூரியை விட்டு வெளியேறி எலியட்ஸ் கடற்கரை சாலையில் செல்லும் வாகனங்கள் மீது கல்வீச்சு நடத்தினர்.

11-15 மணிக்கு அண்ணா சாலையிலுள்ள கலைக் கல்லூரி மாணவர்கள் 100 பேர், கல்லூரியை விட்டு வெளியேறி கன்னிமாரா ஓட்டலுக்கு எதிரில் நின்றிருந்த பஸ்சைத் தீ வைத்துக் கொளுத்தினர்; இதனால் ரூ. 20,000 இழப்பு ஏற்பட்டது.

11-30 மணிக்குச் சில மாணவர்கள் பைகிராப்ட்ஸ் சாலையில் ஒரு பஸ்சுக்குத் தீ வைக்க முயன்றபோது அவர்களைப் போலீசார் விரட்டியடித்தனர்; இதனால் பஸ் சேதமின்றி தப்பியது.

விஷமத்தனச் செய்திகளை நம்பாதீர்

இராணி அண்ணா வேண்டுகோள்

சென்னை, அக். 19—

அண்ணியார் (திருமதி இராணி அண்ணா) அவர்கள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது:—

“ ‘அண்ணா தி. மு. க.’ என்ற அமைப்பை நான் ஏற்றுக் கொண்டதாகச் செய்தி பரப்பப்பட்டிருக்கிறது; இதில் துளிக்கூட உண்மை இல்லை; அரசியல் எதிரிகளால் வழக்கமாகச் செய்யப்படும் பிரச்சாரமாகும் இது!

“ கலைஞர் அவர்களைத் தலைவராகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பதுதான் -- அறிஞர் அண்ணா அவர்கள் வளர்த்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நான் செய்யும் இன்றியமையாக் கடமையாகும் என்பதை இதயபூர்வமாக உணர்ந்திருக்கிறேன்.

“ எனவே, இப்போதும் சரி -- இனி எப்போதும் சரி -- இது போன்ற விஷமத்தனமான செய்திகளை யாரும் நம்பவேண்டாமெனப் பொதுமக்களையும் -- கழகத் தோழர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.”

குழப்பவாதிகள் பிரச்சாரத்திற்கு செவி சாய்க்காதீர்

புதுவை மாநில அமைப்பாளர் எம். ஓ. எச். பாரூக் அறிவிப்பு

பாண்டிச்சேரி, அக். 19—

பாண்டிச்சேரி மாநில தி. மு. க. அமைப்பாளரும், முதலமைச்சருமான எம். ஓ எச். பாரூக் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை கூறியிருப்பதாவது:—

“ திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழு -- பொதுக்குழு முடிவுகளின்படியும் -- கண்ணீராலும், செந்நீராலும் வளர்க்கப்பட்ட கழகத்தின் கட்டுப்பாட்டைக் காப்பாற்றும் வகையிலும் கழகத் தோழர்கள் -- கிளைக் கழக அமைப்பாளர்கள் -- கழக ஆதரவாளர்கள் அனைவரும் குழப்பவாதிகளின் பிரச்சாரத்திற்குச் செவி சாய்க்காமல் பணியாற்ற வேண்டுகிறேன்.

புதுவை மாநில தி.மு.க. ஊழியர்கள் கூட்டம்

“ அக். 22-ம் நாள் பிற்பகல் 2-மணியளவில் பாண்டிச்சேரியில் -- தமிழ்நாடு அமைச்சர் க. இராசாராம் அவர்கள் முன்னிலையில், பாண்டிச்சேரி மாநில தி. மு. க. ஊழியர்கள் கூட்டம் நடைபெறுகிறது; கிளைக் கழகச் செயலாளர்கள் -- உறுப்பினர்கள் -- சார்பு மன்றத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகக் கிராமங்களுக்குக் குடிநீர்

ரூ. 40 கோடி செலவில் தீவிரத் திட்டம்

குடிநீர் வாரியத் தலைவர் தகவல்

கும்பகோணம் அக். 19—

‘ தமிழகத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் தூய்மையான குடிநீர் வழங்குவதற்கான தீவிரத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு அது படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது; இத் திட்டத்திற்கு ரூ 40 கோடி செலவாகும்”

என்று தமிழ்நாடு குடிநீர் -- வடிகால் வாரியத் தலைவர் செ. கந்தப்பன் கூறினார்; அவர் மேலும் கூறியதாவது:—

“ தூய்மையான குடிநீர் வழங்குவதற்கான செலவு ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது; ஆயினும் சராசரி செலவு ரூ. 100 ஆகும்; தர்மபுரி பகுதியில் இந்தச் செலவு ரூ. 170 ஆகும்; ஏனெனில், இங்கு தண்ணீர் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது.

5,000-மும் அதற்கு மேலும் மக்கட் தொகையை கொண்ட 740 நகரங்கள் தமிழகத்தில் இருக்கின்றன; ஆயினும் இதுவரையில் 200 நகரங்களுக்குக்கூட தூய்மையான நீர்வழங்கப்பட இயலாத நிலையில் இருக்கிறோம்.

மாநிலம் முழுவதிலும் 8,850 குழாய்க் கிணறுகள்

மாநிலம் முழுவதிலும், 8,850 குழாய்க் கிணறுகளை அமைக்கத் தமிழ்நாடு குடிநீர் வாரியம் திட்டமிட்டிருக்கிறது; இதுவரையில், 150 ஆழ்கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன.”

நகராட்சி வரவேற்பு

கும்பகோணம் நகராட்சி திரு செ. கந்தப்பனுக்கு வரவேற்புவழங்கியது.

அதற்குப் பதிலளித்துப் பேசுகையில் திரு. செ கந்தப்பன், ‘ அரைகுறையாக நின்றுவிட்டிருக்கும் கும்பகோணம் கழிவுநீர்த் திட்டம் விரைவில் முழுமையாக நிறைவேற்றப்படும்’ என்று உறுதியளித்தார்.

உணவுத் தானியங்கள் மொத்த வர்த்தகம்

மாநில அரசுகளே ஏற்க நிர்வாக நடவடிக்கைகள்

“ உணவுத் தானியங்களின் மொத்த வர்த்தகத்தைத் தாங்களே மேற்கொள்வதற்குத் தேவையான நிர்வாக நடவடிக்கைகளை மாநில அரசுகள் எடுத்து வருகின்றன ”

என்று மத்திய நிதியமைச்சர் சவான், நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

நிதித் துறைக்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த இயலாத நிலையில் அரசு இருப்பதாகக் கடுமையாகக் குறை கூறினர்.

“ பெரும அளவிலான பற்றுக் குறை வரவு-செலவுத் திட்டமே இந்தக் கடுமையான விலைவாசி உயர்வுக்குக் காரணமாகும் ” என்ற உறுப்பினர்களின் குற்றச்சாட்டை சவான் மறுத்தார்.

ஊதிய உயர்வை விழுங்கும் விலை உயர்வு

“ குறைந்தபட்ச போனசுத் தொகையை 8.33 சதவிகிதமாக உயர்த்தியிருப்பது -- மத்திய அரசின் ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணமளித்திருப்பது ஆகியவற்றின் பலனைக் தொழிலாளர்களுக்கு ரூ 40 கோடியும் -- அரசு ஊழியர்களுக்கு ரூ. 35 கோடியும் இந்த மாதம் அதிகப்படியாகக் கிடைக்கிறது; இந்த அதிகப்படி பணம் உண்மையிலேயே அவர்களுக்குப் பலனளித்திருக்கிறதா ”

என்பதைப் பற்றி நிறுவனம் ஒன்று ஆராய்ச்சி நடத்தியது; அதன் மூலம் தெரியவந்திருப்பதாவது:— ‘விலைவாசி’ உயர்வு இந்த அதிகப்படி தொகையை விழுங்கிக் கொண்டிருக்கிறது.

மாநிலத் தலைநகரங்களிலும் -- மற்றும் நகரங்களிலும் சில இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் திடீரென்று 4 முதல் 7 சதவிகிதம் வரையில் உயர்ந்துவிட்டன.

சில தொழிலாளர்களுக்கு போனசுத் தொகை இன்னும் பட்டுவாடா செய்யப்படவில்லை; ஆயினும், சில பகுதிகளில் வியாபாரிகள் ஏற்கனவே -- விலைகளை உயர்த்தி விட்டனர்.

தமிழக அரசை மிரட்டுவதற்கு முயற்சி

எந்தக் கிளர்ச்சிகள் நடந்தாலும் பெரிதுபடுத்திச் செய்திகளைப் பரப்புவதில் சிலர் ஈடுபட்டிருக்கின்றனர்

செய்தியாளர்களிடம் முதலமைச்சர் விளக்கம்

சென்னை, அக். 20—

"தமிழ்நாட்டில் நடக்கும் சம்பவங்கள் பற்றி நேரில் கண்டறிவதற்காக மத்திய அமைச்சர் ஒருவர் தமிழ்நாட்டுக்கு வரப்போவதாகச் சொல்லப்படுகிறதே -- அதுபற்றி உங்கள் கருத்து என்ன ?"

என்று செய்தியாளர் ஒருவர், முதலமைச்சரிடம் வினவியபோது கலைஞர் அவர்கள் கூறியதாவது :—

"பொதுவாகத் தமிழ்நாட்டில் எந்தக் கிளர்ச்சி நடக்காவிட்டாலும் உடனடியாக அவருக்கு மனுப் போட்டு தலைமையமைச்சக்கு தந்தி கொடுப்பது -- 'மத்திய அமைச்சர் வருகிறார்' என்று சொல்வது -- இப்படியெல்லாம் சிலர் செய்திகளைப் பரப்புவதில் ஈடுபட்டுள்ளனர் ; அதைச் சில பத்திரிகைகள் பெரிதாக வெளியிட்டு மிரட்டுவது அண்மைக் காலமாக வழக்கமாகிவிட்டது.

"பஞ்சாப் -- பாட்னா -- உத்திரப் பிரதேசம் போன்ற இடங்களில் பலர் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு ஆளான நேரத்திலும்-- கொல்லப்பட்ட நேரத்திலும், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் தடியடிப் பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்டது மட்டுமெல்லாமல் கைது செய்யப்பட்ட நேரத்திலும் அந்த மாநிலங்களிலெல்லாம் இப்படி ஆளுனர்களின் பெயர்களும், மத்திய அமைச்சர்களின் பெயர்களும் அடிபட்டதாகத் தெரியவில்லை."

எதிர்க் கட்சியினர் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றனர்--- இதில் ஆச்சரியம் ஏதுமில்லை

செய்தியாளர் :— "டில்லி அரசின் -- மத்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரக் குழுக் கூட்டத்தில் தமிழக அரசியல் நிலைமை பற்றி ஆராயப்பட்டதாகவும் அதே நேரத்தில் பேசிய மத்திய அமைச்சர் சுப்பிரமணியம், 'இந்தச் சூழ்நிலையை எதிர்க் கட்சிகள் தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; குறிப்பாக நமது கட்சி (இ. காங்கிரசு) பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; அதுபற்றி நேரில் அறிந்து வருவதற்காக மத்திய அமைச்சர் ஒருவரை தமிழ்நாட்டுக்கு அனுப்ப வேண்டும்' என்று கூறியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறதே -- அதுபற்றி உங்கள் கருத்து என்ன ?"

முதல்வர் :— "எப்போதுமே தி. மு. கழகம் ஒரு சங்கடத்துக்கு உள்ளாகும்போது எதிர்க் கட்சியினர் அதைப் பயன்படுத்திக் கொள்ளத்தான் பார்க்கிறார்கள்; மத்திய அமைச்சர் சுப்பிரமணியம் அப்படிச் சொல்லி இருப்பதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி உண்மையானால் அதற்காக நான் ஆச்சரியப்படவில்லை."

போகப் போகத் தெரிந்துவிடும்

செய்தியாளர் :— "இந்த நடவடிக்கைகளை எல்லாம் பார்க்கும்போது, தி.மு.க. பிளவுக்கு ஏற்கனவே தூண்டுதல் செய்யப்பட்டதாகக் கருதுகிறீர்களா ?"

முதல்வர் :— "போகப் போகத் தெரியும்."

உற்சவத்தைப் பார்த்து ரசித்துக்கொண்டிருக்கிறோம்

செய்தியாளர் :— "நேரடியாக இந்தப் பிரச்சினையில் இந்திரா காங்கிரசுக்கு பங்கு ஏதேனும் உண்டா ?"

முதல்வர் :— "இந்திரா காங்கிரசு முதலில் தூண்டியதா என்று எனக்குத் தெரியாது ; போகப் போகத்தான் தெரியும்.

"ஆனால் திருக்கடையூர் மார்க்கண்டேயன் கதை மாதிரி -- அந்தப் புராணத்தைப் புரிந்தவர்களுக்கு எல்லாம் தெரியும் ; மார்க்கண்டேயன் எமனுக்கும் பயந்து போய் சிவலிங்கத்தைக் கட்டிக்கொள்ளவில்லையா ? நாங்கள் அந்த உற்சவத்தைப் பார்த்து ரசித்துக்கொண்டிருக்கிறோம்."

மார்க்கண்டேயன் யார் ?

செய்தியாளர் :— "இதில் யார் எமன் என்பதைக் கொஞ்சம் விளக்க முடியுமா ?"

முதல்வர் :— "செங்கதச் சங்கம் -- எமன் ; புகலிடம்--லிங்கம் ; மார்க்கண்டேயன் யார் என்று நான் சொல்ல விரும்பவில்லை."

கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது?

செய்தியாளர் :— "இந்திரா காங்கிரசுக் கட்சியினர் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்துகிறார்களா ?"

முதல்வர் :— "அதைத்தான் சி. சுப்பிரமணியம் கூறியதாக -- பத்திரிகைகளில் செய்தி வந்திருப்பதாகக் கூறினீர்களே ; நீங்கள் நினைப்பதுபோல் தி.மு.க.வுக்கு அப்படி ஒன்றும் எந்தவித ஆபத்தும் இல்லை ; யாரும் கவலைப்பட வேண்டாம்."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கவில்லை' என்று அவர்மீது சிலர் களங்கம் கற்பிக்கிறார்கள்-- கழகத்திற்குள்ளேயே ; அதற்கு விளக்கம் தாருங்கள்'' என்று !

அண்ணா பேச எழுகிறார் – ஆம் – பேசுகிறார் :—

"எந்தச் செயலிலும் முந்தியிருக்கின்ற தஞ்சை மாவட்டத் தோழர்களாகிய நீங்கள், உங்கள் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தேர்தல் நிதி பங்குத் தொகையைப் பூர்த்தி செய்து – அதைத் திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளராகிய தம்பி கருணாநிதியிடத்தில் ஒப்படைத்துப் பெருமிதம் அடைகிறீர்கள்; அதைக் கண்டு நானும் பெருமை கொள்கிறேன்.

பொருளாளர் கருணாநிதியிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பணம், ஒழுங்காக வரவு–செலவுக் கணக்காக வைக்கப்பட்டுப் பத்திரமாகப் பாதுகாக்கப்படும்.

இதை நான் சொல்லவேண்டிய அவசியம் என் ஏற்பட்டது? இதைப்பற்றி யாரோ – ஏதோ கூறுவதாக மிகவேதனைப்பட்டு எனக்குமுன் பேசிய நண்பர் குறிப்பிட்டார்.

வரவு–செலவில் ஒரு காசு வித்தியாசப்பட்டாலும், அதனைச் சுடலை காத்தாவது ஒப்புவிக்கப்படும் என்பதற்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்; மற்றவர்கள் பேசுவதற்கும்–எழுதுவதற்கும் கவலைப்படாதீர்கள்."

தஞ்சையில் கொஞ்சிய அண்ணனின் தமிழ் -- 1961-ஆம் ஆண்டு அவர் தந்த அறிவுரையை -- இல்லை, இல்லை -- அவர் திறந்து காட்டிய நெஞ்சகத்தை உனக்கு இப்போது நினைவூட்டினேன்.

அன்று அண்ணன் திறந்து காட்டிய நெஞ்சகம், என்மீதும் -- கழகத்தினர்மீதும் கொண்ட [illegible]ன்பகம்'!

பத்தாண்டுகளு[illegible] 'கணக்கு வழக்கு--சர்வாதிகாரம்' என்ற பழிகள [illegible] என்பதை அறிந்து அன்றைக்கே முன்கூட்டித் திற[illegible] அண்ணனின் 'அறிவகம்'!

அன்பு உடன் பி[illegible] அண்ணன் பேச்சை ஒரு முறைக்கு இருமுறை படித்திடு -- நம்மை வீழ்த்தத் துடித்து விடுவோர் பத்தாண்டுக்கு ஒரு முறை எப்படிக் கிளம்புவார் என்ற உண்மை விளங்கிடும் !

என்மீது வீசப்பட்ட பழிமொழிக்கும் -- தன்மீது வீசப்பட்ட இழிமொழிக்கும் பதில் சொன்ன அந்த நெஞ்சகம் இன்று இல்லையே - என் செய்வேன் ! வஞ்சகம் விளையாடுகிறதே !"

கோவை ஆலைத் தொழிலாளர்கள் ரூ. 1.25 கோடி போனசு பெறுவர்

40,000 பேருக்குக் கிடைப்பது - எவ்வளவு?

சென்னை, அக். 20—

கோவை மாவட்டத்திலுள்ள 59 ஆலைகளைச் சேர்ந்த சுமார் 40 000 தொழிலாளர்களுக்கு ரூ. 1 25 00,000 போனசாக வழங்கப்படும்.

இதற்கான உடன்பாடு, தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறை செயலாளர் எம். எம். இராஜேந்திரன் -- தொழிலாளர் நல ஆணையர் கமலரத்தினம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது ஏற்பட்டது.

கோவை மாவட்டத்தில் மொத்தம் 59 பஞ்சாலைகள் உள்ளன ; இவற்றில் சுமார் 40 000-த்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர் ; இவற்றில் 11 ஆலைகள் மட்டுமே இலாபத்தில் நடக்கின்றன

நேற்று ஏற்பட்ட உடன்பாட்டின்படி; இந்த 40,000 தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச போனசுத் தொகை 8 1/3 சதவிகிதம் கிடைக்கும்.

இலாபம் வரும் ஆலைகளில், இலாபத்திற்கு ஏற்றபடி போனசுத் தொகை வழங்கப்படும் ; அதிகபட்சம் 20 சதவிகிதம் கிடைக்கும்.

மதுரை மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகட்டு

22-10-72 காலை 10 மணியளவில் மதுரை மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம், மதுரை சுப்பாலம் ரோடு, மாணிக்க -- மீனாட்சி திருமண மண்டபத்தில், நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் முன்னிலையில் நடைபெறும் ; பொருள் : கழக எதிர்கால ஆக்க வேலைகள் ; பிரதிநிதிகள் அனைவரும் தவறாது வருகை தர வேண்டுகிறேன்"

என்று, மாவட்ட செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அறிவிக்கிறார்.

திருமணம்

22—10—72 காலை 9 மணியளவில் திருப்பத்தூர் எஸ். இராமமூர்த்தி மருமகளும்--டி. மருதமுத்துவின் செல்வியுமான இந்திராவுக்கும்—கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் மகன் என். எஸ். கே. கிட்டப்பாவுக்கும் சென்னை-நுங்கம்பாக்கம் வில்லேஜி ரோடில் உள்ள சக்கர திருமண மண்டபத்தில் முதலமைச்சர் கலைஞர் தலைமையிலும்—கல்வியமைச்சர் நாவலர் முன்னிலையிலும் திருமணம் நடைபெறும்.

அறநிலைய அமைச்சர்

மு. கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

அக். 21 : காலை 10.45 மணி : சின்ன திருப்பதி -- பிரசன்ன வெங்கட்டரமண சுவாமி திருக்கோயில் தேர்த் திருவிழாவில் கலந்துகொள்ளல் ; பிற்பகல் : ஓமலூர் சட்டப் பேரவை உறுப்பினர் திரு வி. செல்லதுரை அவர்கள் ஏற்பாடு செய்யும் தொகுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

அக். 22 காலை 9 மணி : நசியனூர்—டாக்டர் கலைஞர் மன்றத் திறப்பு ; 10 மணி : ஈரோடு நகர கோ-ஆப்டெக்ஸ் அங்காடி திறப்பு ; 11 மணி : சூரியம்பாளையம் தி. மு. கழகக் கிளை துவக்க விழா ; பிற்பகல் : ஈரோடு சட்டப் பேரவை உறுப்பினர் மா. சுப்பிரமணியம் ஏற்பாடு செய்யும் தொகுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல் ; மாலை 6 மணி : ஈரோடு—மாரியம்மன் கோவில் பார்வையிடல் ; இரவு 7 மணி : ஈரோடு—பொதுகுழு தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம்.

அக். 20 காலை 10 மணி : ஆயிக்கவுண்டன்பாளையம் — பொதுமக்கள் வரவேற்பு ; 11.30 மணி : துடுப்பதி பொதுமக்கள் வரவேற்பு ; பிற்பகல் 3 மணி : ஈரோடு தி.மு.க. வட்டக் கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளல் (பெருந்துறை பயணியர் விடுதி) ; இரவு 7 மணி : சென்னிமலை—பொதுக் கூட்டம் ; 9 மணி : பெருந்துறை—பொதுக்கூட்டம்.

அக். 25 காலை 9 மணி : நன்னிலம்தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் தம்பி ஏ. தேவேந்திரன் திருமண விழாவில் கலந்துகொள்ளல் ; 11 30 மணி : திருநெல்லிக்காவல்-- திருநெல்லிவனநாதர் திருக்கோயில் திருப்பணி கால்கோள் விழா ; பிற்பகல் : குத்தாலம் சட்டப் பேரவை உறுப்பினர் எஸ். கணேசன், ஏற்பாடு செய்யும் தொகுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

விருத்தாசலத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு

உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ரூ. 2,000 உதவிப் பணம்

முதலமைச்சர் உத்தரவு -- இரங்கல்

கடலூர், அக். 20—

விருத்தாசலம் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர் குடும்பத்துக்கு ரூ. 2000 உதவிப் பணம் வழங்க முதலமைச்சர் கலைஞர் உத்தரவிட்டார்.

விருத்தாசலத்தில் ஊர்வலமாகச் சென்றவர்கள், போலீசாரைத் தாக்கி வன்முறையில் ஈடுபட்டதால் கூட்டத்தைக் கலைக்கப் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதால், காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் ஒருவரான கோபால் பிள்ளை என்பவர் இறந்துவிட்டார்.

அவருடைய குடும்பத்துக்கு ரூ 2,000 உதவிப் பணம் வழங்குமாறு முதலமைச்சர் கலைஞர் உத்தரவிட்டார்; அவருடைய குடும்பத்துக்குத் தமது அனுதாபத்தைத் தெரிவிக்கும்படி, மாவட்டக் கலெக்டரைக் கேட்டுக்கொண்டார்.

அதன்படி, தென் ஆற்காடு மாவட்டக் கலெக்டர் மாதவ சர்மா, விருத்தாசலம் சென்று இறந்துவிட்டவரின் மனைவியையும் -- மகனையும் நேரில் சந்தித்து, உதவிப் பணத்தை வழங்கினார் ; முதலமைச்சர் சார்பில் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டார்.

துப்பாக்கிச் சூடு குறித்து மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி விசாரணை நடத்துவார்.

தப்பியோடிய தேஜாவுக்குக் கடுங்காவல்--அபராதம்

புதுடில்லி, அக். 20—

ஜெயந்தி கப்பல் கம்பெனியின் முன்னாள் தலைவர் ஜெயந்தி தர்ம தேஜாவுக்கு செஷன்சு நீதிமன்றம் ஒன்று பல்வேறு குற்றச்சாட்டுக்களின்மீது மொத்தம் மூன்றாண்டுக் கடுங்காவல் தண்டனையும் -- மொத்தம் ரூ. 14 30 இலட்சம் அபராதமும் விதித்தது.

நம்பிக்கை மோசடி -- பொய்க் கணக்கு -- கள்ளக் கையெழுத்து -- ஏமாற்றுதல் ஆகிய குற்றச்சாட்டுக்களின்மீது தேஜாவுக்குமாவட்ட செஷன்சு நீதிபதி தண்டனை விதித்தார்.

அபராதத் தொகைகளைக் கட்டாவிடில் தேஜா மேலும் 3 ஆண்டுக் கடுங்காவல் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

ஜெயந்தி கப்பல் கம்பெனியின் தலைவராக தேஜா இருந்தார் ; சுமார் ரூ. 2 கோடிவரை கையாடல் சம்பந்தமாகத் தேடப்பட்ட அவர், 1967 மே மாதத்தில் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டார்; ஆனால் அவரை இந்தியாவுக்குக் கொண்டுவருவதற்காக நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தபோது, அவர் பொறுப்பில் விடுவிக்கப்பட்டார் ; பொறுப்பை மீறி அவர் கோஸ்டாரிகா நாட்டிற்கு ஓடிவிட்டார் ; கோஸ்டாரிகாவிலிருந்து தேஜாவைக் கொண்டுவரும் முயற்சி வெற்றி பெறவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] இன்று வெளியிடப்படுகிறது.